 தென் ஆர்க்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் கொசுக்களின் தொல்லை பெருகி வருவது குறித்து.

[1981 மார்ச் 10

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உடனேயே, அதை நான் பார்த்துத் தெரிந்து கொண்டதிலே, நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது மாதிரி, நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டுமென்பதில் ஐயப்பாடு இல்லை, கருத்து வேறுபாடு இல்லை. அவைகளைச் செய்யத் தயாராக இருக்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) கன்னியாகுமரி மாவட்ட நீர்த் தேக்க அணைகளில் தண்ணீர் குறைவாக இருப்பதால், கடைவரம்பு நிலங்களிலுள்ள பயிர்கள் தண்ணீரின்றி வாடுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"கன்னியாகுமரி மாவட்ட நீர்த்தேக்க அணைகளில் தண்ணீர் குறைவாக இருப்பதால் சானல்களில் தண்ணீர் வராமல் தோவாளைச் சானல், என். பி. சானல் போன்ற சானல்களில் கடைவரம்பு நிலங்களிலுள்ள பயிர்கள் தண்ணீரின்றி வாடுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து".

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, விவர அறிக்கையில், தென் மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்தால், பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைகளில் 58 சதவிகிதம்தான் தண்ணீர் வந்து சேர்ந்தது, இதனால்தான் இத்தகைய சூழ்நிலை இருக்கிறதென்று சொல்லப் பட்டிருக்கிறது. அதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால் தோவாளை சேனல், என்.பி. சேனல் போன்ற சானல்களின் கடைவரம்பு நிலங்களிலெல்லாம் கடந்த 2, 3 வருடங்களாக, ஒவ்வொரு ஆண்டும் இரண்டாம் போகத்தில் 10,000 ஏக்கர்களுக்குமேல் பயிர்கள் வாடி அழிந்து வந்திருக்கிறது. இந்த வருடமும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இந்த நிலையில் பங்கீட்டு முறையில் கொடுக்கும் தண்ணீர் பற்றாமல் இருந்தால், கோதையாறு மின்சார

@ 559–560 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் வழக்கம் உண்டு. அங்கே போதுமான அளவிற்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லி, தண்ணீர் கொடுக்க மறுக்கப் படுகிறது. இந்த அணையை 7 ஆம் தேதி அடைப்பதாக இருந்தது. அதைக் கொஞ்சம் நீட்டித்து, கொஞ்சம் நிலங்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்வ தோடு, வருடந்தோறும் கடைவரம்பு நிலங்களுக்கு இந்த நிலை ஏற்படுவதால், அங்கே நிலத்தடி நீரைப் பயன்படுத்த கம்யூனிட்டி வெல்ஸ் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: பாசன வசதிகளை முழுமையாகச் செய்து கொடுக்க முடியாததற்கான காரணங்களை விவர அறிக்கையிலே விளக்கியிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அதை நன்கு உணர்ந்து, வேறு வகையிலே செய்ய முடியுமா என்று கேட்டிருக்கி றார்கள். அது குறித்து உடனடியாகத் தலைமை பொறியாளரை வரவழைத்து இன்றைக்கே விவாதித்து, உடனடியாகச் செய்ய முடியுமா என்பது குறித்து அரசுத் தரப்பிலே நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1981)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

@ 560–561 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.